| Headline | Project 'Rumah Mesra Rakyat' - TNB | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan (Sunday) | | |
| Date | 27 Nov 2016 | Language | Tamil |
| Circulation | 55,000 | Readership | 210,000 |
| Section | News | Page No | 7 |
| ArticleSize | 866 cm² | Journalist | NULL |
| PR Value | RM 15,116 | | |
| | | | |



TENAGA NASIONAL

# வள்ளியம்மா வாழ்வில் ஒளியேற்றிய தெனாகா நேஷனல் பெர்ஹாட்




டத்தோஸ்ரீ டாக்டர் சுப்ரமணியத்திடமிருந்து புதிய வீட்டுக்கான அடையாள சாவியை வள்ளியம்மா பெற்றுக் கொள்கிறார்.



புதிய வீட்டின் தோற்றம்.

சமூக நலச் சேவை நோக்கத்தோடு தெனாகா நேஷனல் பெர்ஹாட்டினால் தொடங்கப்பட்ட 'மெஸ்ரா ராக்யாட்' திட்டத்தின் வழி பல சமூகத்தினர் பயனடைந்து வருகின்றனர். வறுமைக் கோட்டில் தனித்து வாழும் தாய்மார்கள், வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் வகையில் அவர்களது வீடுகளை சீரமைத்துக் கொடுப்பது டி.என்.பி.யின் முக்கிய நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் வழி ஜெமெந்தா கம்போங் பாருவைச் சேர்ந்த தனித்து வாழும் தாயாரான வள்ளியம்மா சுப்பிரமணியம் (வயது 63) பயனடைந்துள்ளார். அடிப்படை வசதிகள் இன்றி பல ஆண்டுகாலமாக பழமையான வீட்டில் இவர் வசித்து வந்தார். குறிப்பாக பெற்றோரை இழந்த 3 பேரப்பிள்ளைகளுடன் சிரமத்தை எதிர்நோக்கிய வள்ளியம்மாவின் வாழ்க்கைப் பயணத்தை தெனாகா நேசனல் மாற்றி எழுதியுள்ளது.

தெனாகா நேசனல் பெர்ஹாட் எனப்படும் தேசிய மின்சார வாரியத்தின் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் வெ.50 ஆயிரம் செலவில் அவரின் பழைய வீட்டை இடித்து புதியதாக அங்கு ஒரு வீட்டை கட்டி. அவ்வீட்டுக்கான சாவியை மஇகா தேசியத் தலைவரும் சிகாமட் நாடாளுமன்ற உறுப்பினருமான டத்தோஸ்ரீ டாக்டர் ச.சுப்பிரமணியம் சிறப்பு நிகழ்வு ஒன்றில் வள்ளியம்மாவிடம் அதிகாரப்பூர்வமாக ஒப்படைத்தார்.

சாவியைப் பெற்றுக்கொண்டு நன்றிப் பெருக்கோடு இரு கரம் கூப்பி தனக்குச் சொந்தமான நிலத்தில் 1975 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வீட்டை முழுமையாக உடைத்து புதிய வீட்டைக் கட்டித் தர பெரிதும் உதவியாக இருந்த டத்தோஸ்ரீ டாக்டர் சுப்பிரமணியம் மற்றும் தேசிய மின்சார வாரிய நிர்வாகத்திற்கும் வள்ளியம்மா தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

'மெஸ்ரா ராக்யாட்' திட்டத்தை தொடங்கிய தெனாகா நேசனல் நிறுவனத்திற்கு நன்றி என்ற ஒரு வார்த்தையை மட்டும் கூறிவிட முடியாது.

இன்று நல்ல சுற்றுச் சூழலுடன் நாங்கள் வாழ்வதற்கு வித்திட்டவர்கள் என்ற அடைப்படையில் டிஎன்பி நிறுவனத்திற்கு என்றும் நன்றிக் கடன் பட்டுள்ளேன் என வள்ளியம்மா கண்ணீர் மல்க கூறினார்.

மேலும், இடையில் கடந்த மூன்று ஆண்டுகளாக அவர்களின் வறுமை நிலையை கருத்தில் கொண்ட டத்தோஸ்ரீ எஸ். சுப்பிரமணியம் மாத வாடகையான வெ.250ஐ வழங்கி வந்ததாகவும் வள்ளியம்மா தெரிவித்தார்.

இப்போது புதிய வீட்டில் மூன்று அறைகள் மற்றும் சமையல் அறை, குளியலறை, வரவேற்புக் கூடம் இவற்றோடு மின்சாரம் மற்றும் குழாய் நீர் வசதிகளும் உள்ளன என மனம் நெகிழ்ந்து கண்ணீர் மல்கினார்.



டத்தோஸ்ரீ டாக்டர் சுப்ரமணியம் மற்றும் டத்தோ சக்திவேல் மின்சார வாரிய அதிகாரிகளுடன்.

புரோஜெக் ருமா மெஸ்ரா ராக்யாட் எனும் சமூகக் கடப்பாட்டுத் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் இவ்வகையான வீடுகளை இந்தியர்கள் உட்பட அனைத்து இனங்களைச் சேர்ந்த வறுமையானவர்களுக்கு கட்டிக்கொடுத்து வரும் தேசிய மின்சார வாரியத்தின் இந்த உன்னத சமூகப் பணி பெரிதும் பாராட்டுக்குரியது என்று சுகாதாரத் துறை அமைச்சருமான டத்தோ டாக்டர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இத்திட்டம் குறித்து கூறுகையில், நாடு முழுவதும் இத்தகைய திட்டங்களைத் தேசிய மின்சார வாரியம் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக ஒவ்வொரு மாநிலத்திலும் வறுமையான இந்தியர்கள் இத்திட்டத்தால் பயன் பெறுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் சுமார் வெ.1.32 மில்லியன் செலவில் 92 வீடுகள் புதுப்பிப்பதோ புதிதாகவோ கட்டப்பட்டுள்ளன என்று தேசிய மின்சார வாரிய இயக்குநர்களில் ஒருவரும் மஇகா தேசியப் பொதுச் செயலாளருமான டத்தோ அ.சக்திவேல் குறிப்பிட்டார்.




தனது மூன்று பேரப்பிள்ளைகளுடன் புதிய வீட்டின் முன்னால் வள்ளியம்மா.

Powered by: iSENTIA